

தேனி அருகே வீரபாண்டியில், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி, மாணவரணி, இளைஞரணி சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்ய வலியுறுத்தி கையெழுத்து இயக்க துவக்க நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் தலைமை வகித்தார். பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ சரவணக்குமார், மாணவரணி அமைப்பாளர் வக்கீல்.ஸ்டீபன்.இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் முன்னிலை வகித்தனர். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.பாண்டியராஜன் வரவேற்றார். இதில் தி.மு.க. உயர்மட்ட செயல்திட்டக் குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பொன்முத்து ராமலிங்கம் கலந்து கொண்டு நீட்ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார். இந்நிகழ்ச்சியில் மாணவரணி மாநில துணை செயலாளர் வி.ஜி. கோகுல், அதலை செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் பி.டி. செல்லப் பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் ராசிசெந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் தேனி தெற்கு ரத்தினசபாபதி, தேனி வடக்கு சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாரமேஷ், நகர செயலாளர்கள் தேனி நாராயணபாண்டியன், போடி புருசோத்தமன், பெரியகுளம் முகமதுஇலியாஸ், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதாசசி, வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் ஏராளமான மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறை இணை செயலாளர் அருள்மொழி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) அன்று மதுரை குறிஞ்சி மகாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச் சந்திரன், துணை செயலாளர் பச்சையப்பன்; தலைமை கழக வழக்கறிஞர் சரவணன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவநேசன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

வழக்கறிஞர் அருள்மொழி தலைமை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# மதுரையில் கழக சட்டத் துறை சார்பில் பேச்சுப்போட்டி!

## கழக சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

மதுரை, அக். 24 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 4வது மண்டல பேச்சு போட்டி கழக சட்டத்துறை இணைச் செயலாளர் அருள்மொழி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) அன்று மதுரை குறிஞ்சி மகாலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன்; துணைச் செயலாளர் பச்சையப்பன்; தலைமைக் கழக வழக்கறிஞர் சரவணன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவநேசன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிக்கு நடுவராக வழக்கறிஞர் நன்மாறன் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சிவகங்கை நீதிமன்ற வழக்கறிஞர் சுமித்ராவுக்கு ரூபாய் 50,000 மற்றும் தங்கப் பதக்கம், சான்றிதழ்; இரண்டாம் பரிசு பெற்ற தேனி நீதிமன்ற வழக்கறிஞர் அற்புதராஜ்க்கு ரூபாய் 25,000 வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர் விஜயசாந்திக்கு ரூபாய் 15,000 தாமிரப் பதக்கம், சான்றிதழ்; ஆறுதல் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஷர்மிளாவுக்கும், சுபலக்ஷ்மிக்கும் தலா ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற வழக்கறிஞர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

நெல்லையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாபெரும் உற்சாக வரவேற்பு!

## இரா.ஆவுடையப்பன்- டி.பி.எம்.மைதீன்கான் வேண்டுகோள்!

நெல்லை, அக்.25-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 27ஆம் தேதி நெல்லையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு வருகை தருவதை முன்னிட்டு முன்னதாக நாளை (26 ஆம் தேதி - வியாழக்கிழமை) மாலை தாழையூத்து பண்டாரக்குளம் அருகே மாபெரும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.கழகத்தினர் திரளாக பங்கேற்பீர் என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு,மத்திய மாவட்ட கழகத்தின் சார்பாக 27.10.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கே.டி.சி.நகர் பாலம் அருகே கலைஞர் நூற்றாண்டு விழா திடலில் நடைபெறும் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அன்று காலை 11 மணி அளவில் கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெற உள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க வருகைதரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (26.10.2023-வியாழன்) மாலை 7 மணி அளவில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

அமைச்சராக பொறுப்பேற்று முதன்முறையாக திருநெல்வேலிக்கு வருகை தருகின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்பதற்காக ஒருங்கிணைந்த மாவட்ட கழகத்தின் சார்பில் தாழையூத்து பண்டாரகுளம் அருகில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட கழகத்தின் நிர்வாகிகள்,மாநில நிர்வாகிகள்,மாநகர,பகுதி, ஒன்றிய,நகர, பேரூர்,கிளை, வார்டு,கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,சார்பு அணிகளின் மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகி கள், நகர்ப்புற,ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழகத் தோழர்கள் திரளாக வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் -அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி,அக்.25-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர், ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிஎண்கள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள புதியவாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வது, இடமாற்றம் செய்வது, இறந்தவர்கள் மற்றும் நிரந்தரமாக வெளியூரில் உள்ள வாக்காளர்களை நீக்கம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தியாகவுள்ள புதியவாக்காளர்களை அவசியம் சேர்க்க வேண்டும். புதியதாகபெயர் சேர்ப்பதற்கு படிவம் 6,ஆதார் விபரம் சேர்ப்பதற்கு 6பி,பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7,எழுத்துப்பிழை,முகவரி மாற்றம் செய்தல் மற்றும் புதியவாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கு படிவம் 8 பூர்த்தி செய்து 27.10.2023 முதல் 12.12.2023 வரைவாக்குச்சாவடி மையங்கள் அல்லது வாக்காளர் சேர்ப்பிற்கானதாசில்தார் அலுவலகத்தில் வழங்கலாம்.

மேலும் ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக புதிய வாக்காளர் சேர்த்தல், இடம் மாறுதல், நீக்கம் செய்தல் போன்ற பணிகளைசெய்வதற்குதேர்தல் ஆணையம் நவம்பர் 4, 5 மற்றும் 18, 19 ஆகிய நான்கு நாட்கள் சிறப்புமுகாம் நடத்தஉள்ளது. இந்தமுகாம்களைபயன்படுத்தி வாக்காளர் சேர்ப்புமற்றும் இதரபணிகளில் மாவட்ட,



ஒன்றிய,பகுதி,பேரூர் நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், வார்டு,கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடிநிலைமுகவர்கள் (BLA-2) பூத் கமிட்டிஉறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து இப்பணியைசிறப்பாகசெய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தஆண்டுநடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான இறுதிவாக்காளர் பட்டியல் இப்போதுநடைபெறும் வாக்காளர் சேர்ப்புஅடிப்படையில் 2024 ஜனவரி 5 அன்றுவெளியிடப்படஉள்ளது.

நாடாளுமன்றதேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள வாக்காளர் இறுதிப் பட்டியலாக இருப்பதனால் வாக்காளர் சேர்ப்பில் அதிகமுக்கியத்துவம் செலுத்த வேண்டுமென தி.மு.க தலைவர் தமிழ்நாடுமுதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதைஏற்று கழக முன்னணியினர் தீவிரமாக பணியாற்றவேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவில் மாநகராட்சி

# முக்கூடல் அணை முழு கொள்ளளவை எட்டியது!

## மாவட்டச் செயலாளர்- மேயர் ரெ. மகேஷ் பார்வையிட்டார்!

குமரி, அக்.25-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணை நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை 24.10.2023, செவ்வாய்க் கிழமை எட்டி உள்ளது. இதை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டார். இந்த முக்கூடல் அணையில் இருந்து நாகர்கோவில் மாநகராட்சி பகுதி முழுவதும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. கடந்த இரண்டு, மூன்று நாள் பெய்த கனமழையின் காரணமாக அணையின் 25 அடி முழு கொள்ளளவையும் எட்டியுள்ளதால் மாநகரத்தில் குடிநீர் தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியும். ஏற்கனவே மைனஸ் டிகிரி அளவில் இந்த அணை இருக்கும் போது புத்தன் அணையில் இருந்து கொண்டுவந்த குடிநீரை வைத்து மக்களுக்கு வினியோகிக்கப் பட்டது. இதனால் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. இனி மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீர் வினியோகிக்க முடியும். தற்போது நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் இல்லங்கள் தோறும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இது முறையாக நிறைவு பெற்ற பின்பு தனி நபருக்கு 135 லிட்டர் தண்ணீர் என்ற கணக்கில் தினமும் குடிநீர் வினியோகம் செய்யப்படும். தற்போது அணை முழு கொள்ளவை பெற்று இருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகிறது. 2019 ஆண்டுக்கு பிறகு இப்போதுதான் முழு கொள்ளளவை இந்த அணை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உடன் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர் ஜவகர், மாவட்ட பொருளாளர் கேட்சன், மாவட்டதுணைச் செயலாளர் பூதலிங்கம் பிள்ளை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சதாசிவன், ஒன்றிய செயலாளர் மதியழகன், பேரூர் செயலாளர் ஆலிவர்தாஸ், மாவட்ட மாணவர்அணிஅமைப்பாளர் அருண்காந்த் உட்பட கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் பார்வையிட்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணை நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை எட்டியது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் பார்வையிட்டார்.

ஆத்தூர் ஒன்றியத்தில் ரூ.98 கோடி மதிப்பீட்டில்

# நவீனமுறையில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி முயற்சியில் அமைகிறது!

ஆத்தூர், அக்25

ஆத்தூர் ஒன்றியத்தில் ரூ.98 கோடி மதிப்பில் பிரம்மாண்டமான முறையில் கட்டிட வல்லுநர்களை கொண்டு கட்டப்படும் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 40 வகுப்பறைகள், கணிணி லேப், பிரம்மாண்டமான நூலகம், தனி ஆய்வகங்கள், ஆயிரம் பேர் அமரக்கூடிய உள்ளரங்கம், சிறந்த விளையாட்டு மைதானத்துடன், ஐ.டி.பார்க் கட்டிடம் போல் கட்டப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக 1989ம் ஆண்டு போட்டியிட்ட ஐ.பெரியசாமி இன்று வரை (2023) ஒரே தொகுதியில் போட்டியிட்டு வருகிறார்.

வீட்டு வசதி துறை, சிறைத்துறை, மற்றும் வருவாய்துறை, பத்திர பதிவு துறை, அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ. பெரியசாமி அவர்கள் 2021ம் வருடம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தமிழக சட்டமன்ற வரலாற்றிலே யாரும் பெறாத அளவிற்கு 1லட்சத்து 35 ஆயிரத்தி 571 வாக்குகள் கூடுதலாக பெற்று சட்டமன்ற தேர்தலில் தனி முத்திரை பதித்தார். அவருக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சரவையில் கூட்டுறவு மற்றும் பத்திர பதிவு துறை அமைச்சராக பதவி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கூட்டுறவு துறை அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ. பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் வசிக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் நலன் கருதி எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தினார். குறிப்பாக கிராம புறங்களில் உள்ள நடுநிலை மற்றும் உயர்நிலைபள்ளிகளை தரம் உயர்த்தி மேல்நிலை பள்ளிகளாக கொண்டு வந்தார். இதன் மூலம் பள்ளி படிப்பு படிக்கும் மாணவர்களின் தரம் உயர்ந்தது. அதன்பின்னர் ஆத்தூர் தொகுதியில் வசிக்கும் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி படிப்பதற்காக திண்டுக்கல், நிலக்கோட்டை, பழனி செல்வதை அறிந்த கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழகத்தில் முதன்முறையாக கூட்டுறவு துறை சார்பாக

கூட்டுறவு துறை கலை மற்றும அறிவியல் கல்லூரியை சீவல்சரகு ஊராட்சிக் குட்பட்ட சுதனாகிய புரத்தில் கொண்டுவந்தார்.

இதுபோல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ரெட்டியார்சத்திரத்திற்கும் கொண்டு வந்தார். ஆத்தூர் ஒன்றியத்தில் கூட்டுறவு துறை சார்பாக ரூ.98 கோடி மதிப்பில் சுமார் 8 ஏக்கர் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கல்லூரி சென்னையில் உள்ள ஐ.டி.பார்க் போல் அமைக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக கல்லூரியில் நிர்வாக அலுவலகம், ஆசிரியர்கள் ஓய்வறை, மாணவர்களுக்கு 40 வகுப்பறைகள், கணிணி லேப், பிரம்மாண்டமான நூலகம், வேதியியல், இயற்பியல், உயிரியலுக்கான ஆய்வகங்கள், கல்லூரி மாணவர்கள் ஆயிரம் பேர் அமரக்கூடிய மிகப்பிரம்மாண்டமான உள்ளரங்கம், மாணவர்கள் விளையாட சிறந்த விளையாட்டு மைதானத்துடன் கட்டப்பட்டு வருகிறது. கட்டிட பணிகள் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது தவிர கல்லூரி தேசிய நான்கு வழிச்சாலை பகுதியில் அமைந்திருப்பதால் பிரம்மாண்டமான நுழைவு வாயில் சிறந்த கட்டிட கலைஞர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டு வருகிறது. குறைவான கட்டணத்தில் தரமான கல்வியை கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கவும், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இல்லாத அளவிற்கு அதிநவீன வசதியுடன் கல்லூரி அமைவதற்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எடுத்து வரும் முயற்சிக்கு தொகுதி மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளது.

இது குறித்து ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கேட்டபோது நான் கூட்டுறவு துறை அமைச்சராக இருந்த போது தமிழகத்திலே முதல் கூட்டுறவு துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொண்டு வந்தேன். கல்லூரியை ஆத்தூர் ஒன்றியத்திற்கு கொண்டு வந்த சீவல் சரகு ஊராட்சியில் அமைவதற்கு காரணம் அந்த ஊராட்சியை சுற்றியுள்ள 8க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் வசிக்கும் மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளனர். ஒரு சில மாணவர்கள் காலையில் 4 மணிக்கு எழுந்து பூப்பறிக்கும் வேலைக்கு சென்று விட்டு அதன்பின்பு பள்ளிக்கு செல்வதை பார்த்திருக்கிறேன். இந்த கல்லூரியை (சீவல்சரகு ஊராட்சி) இப்பகுதியில் அமைத்தால் இதனை சுற்றியுள்ள ஆத்தூர். வீரக்கல், வக்கம்பட்டி, முன்னிலைக்கோட்டை, என்.பஞ்சம்பட்டி, காந்தி கிராமம், அம்பாத்துரை, தொப்பம்பட்டி, செட்டியபட்டி, போடி காமன்வாடி, எஸ். பாறைப்பட்டி, அக்கறைப்பட்டி, மற்றும் சி;ன்னாளபட்டி பேரூராட்சி, சித்தையன்கோட்டை பேரூராட்சியை சேர்ந்த ஏழை மாணவர்கள் மற்றும் கைத்தறி நெசவு தொழிலாளர்களின் பிள்ளைகள் பயன் பெறுவார்கள் என்ற அடிப்படையில் கல்லூரியை கொண்டுவந்துள்ளோம்.

இந்த கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் நவீன வசதியுடன் கூடிய அரசு கல்லூரியில் படிக்கிறோம் என்பதை உணர்வார்கள். வரும் 2024ம் ஆண்டுக்குள் கட்டிட பணிகள் முடிவடைந்து திராவிட மாடல் ஆட்சி நாயகன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்பட உள்ளது என்றார். வெளி மாவட்டம் மற்றும் வெளியூர்களிலிருந்து மாணவர்கள் அதிகளவில் சேர்ந்தால் அவர்களுக்கு; விடுதி வசதியும் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகிறது என்றார்.



தேனி தெற்கு மாவட்டம் தகவல் தொழில்நுட்ப அணியின் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றியம், பேரூர், நகர ஒருங்கிணைப்பாளர்கள் தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் கம்பம் சட்டமன்ற உறுப்பினருமான கம்பம் ராமகிருஷ்ணன், ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளரும் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான மகாராஜன் ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.